மின் பயனீட்டாளர்களுக்கு மின்வாரியம் விதித்துள்ள நிபந்தனை

511 —(*வினா எண் 21525) திரு. மா. சின்னராசு, திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மின் வாரியம் மின்சாரப் பயனீட்டாளர்களே மின் இணைப்புக்காகும் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் விதித்துள்ளதா ?

(ஆ) இது குறித்து புகார்கள் எதுவும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மின் பயனீட்டாளர்களே மின் இணைப்பிற்காகும் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை ஏதும் இல்லை. ஆனால் மின் பயனீட்டாளர்களுக்குச் சொந்தமான இடத்தில் எடுத்துச் செல்லப்படும் மின்பாதைக்குரிய கட்டணத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஐ.நா. மன்றத்திற்குச் சென்றபோது, மின் வாரியம், பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் எங்கேயிருந்து எடுக்கப்படுகிறதோ, அங்கிருந்து மின்சாரம் பயன்படுத்துகின்ற இடம் வரையுள்ள செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற கட்டாய உத்தரவை அமல்படுத்திய நேரத்தில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. அமைச்சரவர்கள் திரும்பி வந்ததும் இதில் தலையிட்டு பழைய மாதிரி பயனீட்டாளர்களுக்குள்ள செலவுகளைக் குறைத்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய சொந்த இடமாக இருக்கிறதே தவிர, வேறு இடங்களில் மின் இணைப்பைக் கொண்டுபோவதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிபந்தனை இல்லை. அதற்கான ஆப்ஷன் இருக்கிறது. சில மின் பயனீட்டாளர்கள் மின் வாரியம் சர்வீஸ் கனெக்ஷன் தருவதற்குக் காலதாமதம் ஆகியது என்று கருதுவார்களேயானால், அவர்களுடைய சொந்தச் செலவில் மின் இணைப்பை அமைத்துக்கொள்வதற்கு ஆப்ஷன் இருப்பதால், அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் கம்பல்ஷன் இல்லை.

1984 மார்ச் 30]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் மின் இணைப்பு கொடுப்பதற்குத் தயாராக இருந்தாலும், மின் இணைப்புக்கு வேண்டிய சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அப்படி மின் இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய மின் இணைப்புச் சாதனங்கள் பற்றாக்குறையைப் போக்கிவிட்டதா ? அப்படி இல்லையென்றால், மின் வாரியம் உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு, பற்றாக் குறையைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுவும் ஒரு குறை. மின் இணைப்பு தருவதற்குச் சாதனங்கள் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றினால் காலதாமதம் ஏற்படுகிறது, எனவே மின் பயனீட்டாளர்கள் இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : காலதாமதம் ஏற்படுமேயானால் அவரவர்களே வாங்கித் தந்தால், உடனடியாக இணைப்பைக் கொடுப்பதற்கு ஆப்ஷன் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனவே அப்படி ஆப்ஷன் இருப்பதன் காரணமாக அவர்களே வாங்கித் தருவார்கள். நாம் ஏன் செலவு பண்ணவேண்டுமென்று டிலே பண்ண இடம் அளிக்கிறது. ஊழலுக்கும் அன்பேர் பிராக்டீசுக்கும் இடம் கொடுக்கிறது. ஆகவே ஏன் அவர்கள் டிபார்ட்மெண்டிலேயே இதை வாங்கக் கூடாது ?

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே ஊழலுக்கோ, முறைகேடுகளுக்கோ, நிச்சயமாக இடம் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், நாம் நிதி ஒதுக்கம் செய்கிறபோதும், இந்த சர்வீஸ் கனெக்சன் மெட்டீரியல்சுக்கு இவ்வளவு என்று நிதி ஒதுக்கம் செய்கிறோம். அதற்கான ஆர்டர்களும் அவர்கள் போடுகிறார்கள். அதற்குரிய மெட்டீரியல்ஸ் வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வளவு பெருமளவிற்குக்கூட பயனீட்டாளர்கள் இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. நிறைய லோன் வாங்கி, எல். டி. இன்டஸ்ரீஸ், சிறிய இன்டஸ்ட்ரிஸ் போட்டுவிட்டு காத்துக்கொண்டு இருப்பவர்கள், அதைப் போல உள்ளவர்கள் இதை ஓரளவிற்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, இது முறைகேட்டுக்கு வழி வகுக்காது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஆப்சனிலிருந்து' விவசாயத்திற்காக எடுக்கப்படும் மின் இணைப்புக்கு விதிவிலக்கு ஏதும் தரப்பட்டிருக்கி

றதா? விவசாயிகளுடைய நிலம் ஓரளவிற்குப் பரந்ததாக இருந்தால், 4 அல்லது 5 மின் கம்பங்கள் போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் அவர்களுக்குச் செலவு அதிகமாக ஆகிறது. ஆகவே அவர்களுக்கு 'கன்சசன்' தருகிற முறையில், நிவாரணம் தருகிற முறையில், அதிலிருந்து ஏதாவது சலுகை கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு இது பொருந்தாது. விவசாயத்திற்கு முழுவதுமே மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையில் இருந்து போடப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, விவசாயத்திற்கு இது பொருந்தாது என்று சொன்னார்கள். பெரும்பாலான இடங்களில மின் கம்பங்கள் ஏனையவைகளைக் கொண்டு வருவதற்கு இந்த விவசாயிகளை மின் இலாகா பயன்படுத்தி கொண்டு வருகிறது. மேலும் அவர்கள் அப்படிக் கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது, வண்டி வாகனங்கள் இல்லாததால். ஆகவே மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. எனவே இந்த மாதிரியான புகார்கள் வருகிறபோது, அரசாங்கம் பரிசீலனை செய்து, இதைத் தவிர்க்க முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதில் ஒன்றும் புகார் வருவதில்லை. அதை விவசாயிகளே செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். அது தொன்றுதொட்டு வரும் வழக்கம்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே இருந்து மின் இணைப்பு பயனீட்டாளருக்குக் கிடைக்கிறபோது, அது அலுமினியம் ஒயரிலே செய்யப்படுகிற ஒயராக இருப்பதாலே, மின்சாரம் அடிக்கடி தடைப்படுகிறது அல்லது லோ-வோல்டேஜ் வருகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க செப்புக் கம்பியை வாங்கி அந்த ஒயரை வைத்து, மின் இணைப்பு தந்தால் நல்லது என்று பயனீட்டாளர்கள் நினைக்கிறார்கள். தற்போது, நகரங்களிலும் கிராமங்களிலும் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது அல்லது லோ-வோல்டேஜில் வருகிறது. எனவே இவைகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செப்புக் கம்பியைப் போடுவது சாத்தியம் அல்ல என்று பலமுறை சொல்லியிருக்கிறேன் ஏன் என்றால் செப்புக் கம்பி போட்டால் அது அங்கே இருப்பதில்லை.

1984 மார்ச் 30]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பயனீட்டாளர்களுக்கு மின்வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளில் ஒரு நிபந்தனை, முன்னால் எல்லாம் குறிப்பிட்ட நாட்களுக்குள் பணம் கட்டவில்லை என்றால், திரும்பவும் பணம் கட்டுகிற போது 5 ரூபாய் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று இருந்தது. இப்போது அந்த 5 ரூபாயை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே 1 நாள், 2 நாள் கழித்து, ஞாபகமறதியாகக் கட்ட மறந்துவிட்டு, பின்னர் போய் பணம் கட்டும்போது 10 ரூபாய் என்று சேர்த்து வாங்குவதை, 5 ரூபாயாகக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரூபாயின் மதிப்பு குறைந்து வருகிற இந்தக் காலத்தில் இது ஒன்றும் பெரிதல்ல

•

நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் திட்டம்

512—(*வினா எண் 17247) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நாகப்பட்டினத்தில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 12.50 இலட்சம்.

(ஈ) முறையாக முடிவெடுத்தபின் வேலை தொடங்கப்படும்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினம் ஒரு மேஜர் சென்டர். பயணிகளைப் பொறுத்தவரைக்கும், நாகூருக்கு இலட்சக்கணக்கான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS